# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2325/44 - 2023 මාර්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.03.30

*2325/44 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 13/1978* (III)

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

**உயர் நீதிமன்ற விதிகள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 136 ஆம் உறுப்புரையின்கீழ் பிரதம நீதியரசரினாலும் அவ்வுறுப்புரையின்கீழ் அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினாலும் ஆக்கப்பட்ட விதிகள்.*

| | | | |
|---|---|---|---|
| **ஜயந்த ஜயசூரிய,** | **வி. கே. மலல்கொட,** | **எம். என். பி. பர்ணாந்து,** | **கே. கே. விக்கிரமசிங்க,** |
| *பிரதேச நீதியரசு.* | *உயர் நீதிமன்ற நீதிபதி.* | *உயர் நீதிமன்ற நீதிபதி.* | *உயர் நீதிமன்ற நீதிபதி.* |

*கொழும்பு 03,*
*2023, மாச்சு 30.*

**விதிகள்**

*1.* *1978, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 1/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 ஆம் ஆண்டின் நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் நீதிமன்ற உடை பற்றிய விதிகள், அதன் 7 ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-*


1A -G 39244 — 07 (2023/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

"7. (1) பெண் சட்டத்தரணிமாரின் நீதிமன்ற உடை பின்வருமாறிருத்தல் வேண்டும் :-

(அ) வெள்ளை, கறுப்பு, வெளிறிய வெண்மை, சாம்பல் அல்லது ஊதா நிறத்திலான சேலை மற்றும் சட்டை ; அல்லது

(ஆ) வெள்ளை நிற மேற்சட்டை, கறுப்புநிற கோற் மற்றும் காலணிகளுடன் கறுப்பு நிற காற்சட்டை ; அல்லது

(இ) வெள்ளை நிற மேற்சட்டை, கறுப்புநிற கோற் மற்றும் காலணிகளுடனான கறுப்பு நிற பாவாடை.

(2) (அ) (1) ஆம் உபவிதியின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட காற்சட்டையின் நீளம் கணுக்கால் வரை இருத்தல் வேண்டும்

(ஆ) (1) ஆம் உபவிதியின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பாவாடையின் நீளம் அமரும்போது முழங்காலுக்குக்கீழ் இருத்தல் வேண்டும்.

(இ) (1) ஆம் உபவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட மேற்சட்டை கழுத்துவரை அணியப்பட்டு நீண்ட கையுடையதாகவிருத்தல் வேண்டும்.".

2. 2018, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 2091/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டின் நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் நீதிமன்ற உடைகள் பற்றிய விதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

EOG 03 - 0397

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.